## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அறநெறிப் பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அறநெறிப் பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறநெறிப் பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | இராஜாங்க அமைச்சின் நிகழ்ச்சித் திட்டம் பிரகாரம் செலவின பொழிப்பில் (ACA 2 மாதிரி) நிகழ்ச்சித் திட்டம் 2 இன் மீண்டெழும் செலவினம் ரூபா 4,605,855,630 மற்றும் மூலதன செலவினம் ரூபா 193,584,237 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித் திட்டம் பிரகாரம் செலவின கூற்றில் (ACA 2 i) அச் செலவினம் முறையே ரூபா 4,635,855,630 மற்றும் ரூபா 163,584,237 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் நிகழ்ச்சித் திட்டம் 2 இன் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களின் மொத்தங்களின் இடையே ரூபா 30,000,000 ஆன வேறுபாடு காணப்பட்டது. | உங்களுடைய அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. கைதவறுதலாக மீண்டெழும் செலவீனமான 1501 நலன்புரி செலவினம் ACA2 மாதிரியில் மூலதன செலவினத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது மீண்டும் ஏற்படாதிருக்க பார்த்துக் கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டினுள் மூலதன சொத்துக்கள் கையகப்படுத்தல் செலவினம் ரூபா 104,271,049 ஆன போதிலும், சிகாஸ் வலைத் தளத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட நிதி அல்லாச் சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 75,943,679 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் கணக்கு மற்றும் அறிக்கை இடையே ரூபா 28,327,370 ஆன வேறுபாடு காணப்பட்டது. | உங்களுடைய அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டின் சொத்துக்கள் கையகப்படுத்தல் அனைத்தும் சிகாஸ் வலை பயன்பாட்டில் காணப்பட்ட பிழையொன்றின் காரணத்தினால் Web upload செய்வதற்கு முடியாமல் போனது. Web upload செய்யப்படாத சொத்துக்கள் அனைத்தும் 2022 ஆம் ஆண்டில் Web upload செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி - |

## 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | -------------------------------- | ------------------------------ | ---------------- |
| (அ) | நிதி பிரமாணம் 447 பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப்பணங்கள்) பேரேடு உரிய முறையில் பேணிச் செல்லப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சரியாக செலவின பேரேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணம் 447 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் 138 ஆம் பொது மாதிரி பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப்பணங்கள்) பேரேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | 2017 யூலை 05 திகதிய 256/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாட்டின் பிரகாரம் சீ.சீ.10 மாதிரி மற்றும் அம் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் 02 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,900,000 ஆன மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | உங்களுடைய அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. | செலவினம் உரிய வண்ணம் முகாமை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | செலவின விடயங்கள் 06 இன் ரூபா 21,100,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 8,991,517 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 31 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | COVID – 19 காரணத்தினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் செலவினம் குறைந்தமையினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது. | -மேற்படி- |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் 2021 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 4,976,047 ஆன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இல் பொறுப்பின் கீழ் இந்த செலவினம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களின் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டின் நிதியேற்பாடு காணப்படாமை காரணத்தினால் 2022 ஆம் ஆண்டில், 2021 ஆம் ஆண்டிற்குரியதாக ஏற்கப்பட்ட செலவினம் பொறுப்பின் கீழ் காண்பிப்பதற்கு முடியாது போனமை. | பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களினுள் காண்பிக்கப்படல் வேண்டும். |

## 2.3 மிகை செலவினம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 422-2-3-3-1001 செலவின விடயத்தின் நிதியேற்பாடு ரூபா 3,280,318,000 ஆக காணப்பட்டதுடன் செலவினம் ரூபா 3,354,673,089 ஆகியமையினால் மிகை செலவினம் ரூபா 74,355,089 ஆக காணப்பட்டது. இக் காரணத்தினால் 422-2 நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றும் 422-2-3 செயற்திட்டத்தின் ரூபா 37,339,867 ஆன மிகை செலவினம் மற்றும் 422 செலவின விடயத்தின் ரூபா 18,340,002 ஆன மிகை செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. | கல்வி அமைச்சிடமிருந்து நி.பி 208 இன் கீழ் நிதியேற்பாடு கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டது. பொது திறைச்சேரியின் நானாவித கணக்கு அதன் போது பூஜ்ஜியமாக்கப்பட்டிருந்தமையினால் நிதியேற்பாடு பெற்றுக் கொடுப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய தேறிய நிதியேற்பாடு எல்லைமீறலொன்று ஏற்பட்டுள்ளது. | மதிப்பிடப்பட்ட நிதியேறப்பாட்டினுள் செலவினம் முகாமை செய்யப்படல் வேண்டும். |

## 2.4 எல்லை மீறல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண பணிகளுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்ற செலவினங்களின் உயர்ந்தபட்ச எல்லை ரூபா 8,000,000 ஆக காணப்பட்டதுடன் திருத்தப்பட்ட எல்லை ரூபா 32,000,000 ஆக காணப்பட்டது. ஆண்டு இறுதியில் உள்ளவாரான பெறுமதி ரூபா 33,401,679 ஆக காணப்பட்டதுடன் செலவின உயர்ந்தபட்ச எல்லை மீறல் ரூபா 1,401,679 ஆகும். | உங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் எல்லைகள் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை | | | | |
| | (i) நிதி பிரமாணம் 371(2) | 642,930 | 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 இனை மேற்பட்டு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது-டன் அதில் 02 முற்பணம் 19 நாட்கள் தொடக்கம் 28 நாட்கள் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ரூபா 100,000 இனை மேற்பட்டு முற்பணம் வழங்கப்படாதிருப்பத-ற்கு மற்றும் 02 வாரங்களினுள் தீர்ப்பதறக்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) நிதி பிரமாணம் 751 | 1,315,070 | இருப்பு பொருட் பதிவேடுகளில் உபகரணங்கள் பதியப்பட்டிருக்க-வில்லை. | நாட்டின் நிலை சூமூகமாகியவுடன் பிரிவேனாக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட பொருட்களுக்குரிய ரீசீதுகள் பூரணப்படுத்தப்படுவத-ற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சிற்கு கிடைக்கப் பெறுகின்ற அனைத்து பொருட்களும் நிதி பிரமாணம் பிரகாரம் பொருட் பதிவேடுகளில் பதியப்படல் வேண்டும். |
| | (iii) நிதி பிரமாணம் 756 (6) | - | மீளாய்வாண்டின் பொருள் சுற்றாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கு தொடர்புடையதாக சுற்றாய்வு சபையொன்று உரிய முறையில் நியமிக்கப்பட்டுள்ளது-டன் தற்போது பொருள் சுற்றாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள-ன. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2006 பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.8.3 ஆம் பந்தி | 1,315,070 | பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட 03 தொழில்நுட்ப மீளாய்வு குழுக்களுக்காக தொழில்நுட்ப அறிவுடைய நபர்கள் நியமிக்கப்பட்டிருக்க-வில்லை. | கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப குழுவிற்கு விடய நிபுணரொருவர் நியமிப்பதற்கு கடினமாகியது. எனினும் எஞ்சிய கொள்வனவிற்காக விடய நிபுணரொருவர் உள்ளடங்கலாக தொழில்நுட்ப மீளாய்வு குழுவொன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 1.1.4 ஆம் பந்தி | 321,154 | இடமாற்றல் பெறப்பட்ட உத்தியோகத்தர்-களின் கடன் மீதி மாதாந்த கணக்கு பொழிப்பு ஊடாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

### 3.1 திட்டமிடல்

------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | --------------------------------- | -------------------------- | ----------------- |
| (அ) | செயல்நடவடிக்கை திட்டம் பிரகாரம் பிரிவேனா கட்டிடங்கள் பழுதுபார்த்தல் மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரிவேனாக்கள் தெரிவு செய்துக் கொள்வதற்கு உரிய முறைமையொன்று அறிமுகப்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்கள் அவதானிப்புடன் இணங்குகின்றேன். | அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரிவேனாக்கள் தெரிவு செய்துக் கொள்வதற்கு உரிய முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தெரிவு பரிசோதனையின் போது மொனராகலை மாவட்டத்தின் 18 பிரிவோனாக்களின் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக ரூபா 24.38 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 10 பிரிவேனாக்களுக்காக ரூபா 13.88 மில்லியன் நிதியேற்பாடு மட்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அத் தொகையில் ரூபா 2.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இன்னும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 10.28 மில்லியன் ஆக காணப்பட்டது. | -மேற்படி- | நிதியேற்பாடு உயர்ந்த பட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 22 அறநெறி பாடசாலைகளுக்காக கட்டிடங்கள் புனரமைப்பு நடவடிக்கைக்காக ரூபா 11.03 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு தொடர்புடைய செயன் முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதியேற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்று அமைச்சினால் முறையான மேற்பார்வையொன்று அல்லது பின்னூட்டல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எங்களிடம் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்காக மாவட்ட மட்டத்தில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களினதும் செயன்முன்னேற்ற அறிக்கை எங்களுக்கு பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரம் பெறப்பட்டுள்ளது. | நிதியேற்பாடு பயன்படுத்தல் தொடர்பாக முறையான மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

--------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | -------------------------------- | -------------------------- | ---------------- |
| (அ) | 2021 திசெம்பர் மாத்தில் ஆடர் செய்யப்பட்ட ரூபா 62,412,298 பெறுமதியுடைய உபகரணங்கள் தொடர்பான பெறுகை கட்டளை வழங்கல் கடிதத்தில் (letter of awarding) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரகாரம் குறித்த தினங்களில் தம் பெறுகை நடவடிக்கை நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 50,467,889 ஆன பொருட்கள் பகிர்தளிப்பதற்கு 2022 பெப்ரவரி 10 ஆம் திகதி வரை 42 நாட்கள் தொடக்கம் 173 நாட்கள் வரையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. | உங்களுடைய அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் உரிய வண்ணம் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பெறுகை கட்டளை வழங்கல் கடிதத்தின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடினம், அதிகடினம் மற்றும் தனிமைப்பட்ட பிரதேசங்களிலுள்ள பிரிவேனாக்களில், மாணவ பிக்குமார்களுக்கு, சீல் மாதாக்களுக்கு, மாணவ மாணவிகளுக்கு காலணிகள் பெற்றுக் கொடுக்கம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 06 மாகாணங்களில் 12 மாவட்டங்களினுள் 22,277 மாணவர்களுக்காக காலணி பரிசில்கள் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 30 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் அக் காலணி பரிசில்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்வில்லை. | காலணி பரிசில்கள் அவ் அவ் மாகாணங்களின் கல்வி பணிப்பாளர் (பிரிவேனா) ஊடாக குறித்த பிரிவேனாக்களுக்கு பிரிவெனாதிபதி ஊடாக மாணவ பிக்குமார்களுக்கு மற்றும் சீல் மாதாக்களுக்கும் மாணவ மாணவிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசில் பெற்றுக் கொடுத்த விதம் தொடர்பான பதிவேடொன்று இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | காலணி பரிசில்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கு உறுதி செய்யும் பதிவேடு முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கல்வி அமைச்சின் நிதியேற்பாட்டில் இராஜாங்க அமைச்சிற்கு ரூபா 3,728,063 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் இந்த பணத்தொகை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டிருப்பினும் இந்த பணி நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த கொடுப்பனவிற்காக ரசீதும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடியாததுடன் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. | பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்கள் அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உள்ளக கணக்காய்விற்காக கல்வி அமைச்சின் உதவியினை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்கள் அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. உள்ளக கணக்காய்விற்காக கல்வி அமைச்சின் உதவி பெறப்பட்டவுடனே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் ஓட்டுனர் பதவிகள் எண்ணிக்கை 07 காணப்படினும் உள்ளவாரான ஓட்டுனர் எண்ணிக்கை 11 ஆகியமையினால் மிகை 04 ஆகும். அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத நான்கு பதவிகளின் உள்ளவாரான ஊழியர் எண்ணிக்கை 09 ஆகும். | பதில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வளம் உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |